# ★ அமைச்சரின் கண்துடைப்பு வேலை ★


Phone: No. 4502 Regd: No. M. 5458

விலை முக்காலணா இலங்கை 8 சதம்

# மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 10—1—51 | மணி 39


## நெசவுத் தொழிலாளர் குறை தீர்க்கப்படவில்லை

(o)

### அழுத பிள்ளைக்கு வாழைப்பழம் காட்டும் அமைச்சர்

சென்னை, ஜன. 8—

சென்னையில் உற்பத்தி செய்யப்படும் நூல்களையெல்லாம் தங்கள் நாட்டுக்குக் கொண்டு சென்றதன் பயனாக, இங்குள்ள லட்சக் கணக்கான மக்கள் வேலையற்றுப் போய்ப் பட்டினி கிடக்கவும், உயிரிழக்கவும் நேர்ந்ததற்கு மத்திய அரசாங்க அமைச்சர் மஹ்தாப் ஒரே வார்த்தையில் 'தவறுதான்' என்று முடித்துவிட்டார்.

தங்களுக்கு லாபம் கிடைக்கக் கூடிய வேலையைச் செய்து முடித்துக்கொண்டு, மக்கள் உறக்கம் தீர்ந்து விழித்துக்கொண்டார்கள் என்றவுடன் தவறுதான் என்று ஒரு வார்த்தை கூறித் தப்பித்துக் கொள்ளும் வேலையில் இறங்கிவிட்டிருக்கின்றனர் வட நாட்டவர்.

தவறு என்று தெரிந்துகொண்ட பின்னரும், திராவிட நாட்டு மக்களுக்குத் தேவைப்படும் அளவு நூலைக் கொடுக்க முன் வராமல், தேவையைவிடப் பெரிதும் குறைந்த அளவு நூலைத்தர இந்த அமைச்சர் முன் வந்திருக்கிறார். இவற்றையெல்லாம் ஆழக் கவனிக்கும் தோழர்கள், வடநாட்டுத் தொடர்பால் நமக்கேற்படும் தொல்லைகள் என்னவென்பதை நன்கறிந்து கொள்ளலாம்.

இந்திய அரசாங்கத்தின் கைத்தொழிலமைச்சர் தோழர் ஹரிகிருஷ்ண மெஹ்தாபைத் தூதுக் குழுவினர் சந்தித்த போது, சென்னை அரசாங்கத்தில் உற்பத்தியான நூலை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய இந்திய சர்க்கார் அனுமதித்தது பெருந்தவறு என்றும், நாட்டுப்பஞ்சத்திற்கு இதுவும் ஒரு காரணமாகு மென்றும், இந்தத் தவற்றை ஏற்றுக்கொள்ளவே தாம் இங்கு வந்திருப்பதாகவும் கூறினார்.

பிறகு அடுத்த நான்கு மாதங்களில் சென்னைக்கு வினியோகிக்கப் படக்கூடிய நூலின் அளவைத் தெரிவித்தார்.

அதாவது, 1951 ஜனவரியில் 42,624 பேல் நூல் கிடைக்குமென்றும், இதில் 17,451 பேல் சென்னைக்கு ஒதுக்கப்படுமென்றும். பிப்ரவரியில் கிடைக்கும் 48,129 பேல்களில் 18,801 பேல்கள் சென்னைக்கென்றும், மார்ச்மாதம் கிடைக்கும் 50,777 பேல்களில் 19,037 பேல்கள் சென்னைக்குக் கிடைக்குமென்றும், எப்ரலில் 22,500 பேல்கள் சென்னைக்குத் தரப்படுமென்றும் அமைச்சர் மெஹ்தாப் அறிவித்தார்.

ஆக நான்கு மாதங்களில் சென்னைக்கு 77,789 பேல்கள் நூல் கிடைக்குமென்று அமைச்சர் அறிவித்தார். ஆனால் நெசவுத் தொழிலாளர்களுக்கு இந்த நான்கு மாத காலத்தில் குறைந்தபட்சமாகத் தேவைப்படும் நூலினளவு 1,20,000 பேல்களாகும். அதாவது மாதா மாதம் 30,000 பேல் நூல் இருந்தால்தான் நெசவாளர்கள் மாதம் 20 நாளைக்காவது வேலை செய்ய முடியும்.

1948-ல் நம் நாட்டில் மாதம் 85,000 பேல் நூல் உற்பத்தியாகி வந்தது. இப்போது, பருத்தி சரியானபடி வினியோகமாகுமாறு அரசாங்கம் அக்கறை எடுத்துக்கொள்ளாமையாலும், மில்களைச் சரிவர நடத்துமாறு முதலாளிகளை வற்புறுத்தும் அதிகாரம் அரசாங்கத்திடம் இல்லாமையாலும், நூல் உற்பத்தி 62,000 பேல்களாகக் குறைந்துவிட்டன. இப்படிக் குறைவு ஏற்பட்டதை அறிந்தும் அரசாங்கம் ஏற்றுமதிக்குவேறு இடம் அளித்தது. எனவே பஞ்சம் தலைவிரித்தாடியது.

இப்போது, நூல் ஏற்றுமதி முழுவதும் தடை செய்யப்பட்டிருப்பதாகவும், புதிதாகத் துவக்கப்படும் மில்கள், நெசவாளர் தேவைக்காக குறிப்பிட்ட அளவு நூல் ஒதுக்க

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஒரு நாளைக்கு 20 கார்கள்

:o:

### வண்டலூர் தொழிற்சாலையில் உருவாக்கப்படும்

சென்னை, ஜன. 9—

சென்னைக் கருகிலுள்ள வண்டலூரில் நிர்மாணிக்கப்படும் ஸ்டாண்டர்ட் மோட்டார் பிராடக்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்டின் தொழிற்சாலையில் தினத்திற்கு 20 கார்கள் உருவாக்கப்படும் என்று இக் கம்பெனியின் காரியதரிசி தோழர் ஆர்.வி.ஆர். தாத்தாச்சாரி, தெரிவித்தார்.

உற்பத்தியை இன்னும் அதிகரிப்பதே கம்பெனியின் நோக்கம் என்றும் அது உள்ள தேவைகளைப் பொறுத்தது என்றும் அவர் தெரிவித்தார்.

இக்கம்பெனியின் தொழிற்சாலைக்கு அஸ்திவாரக் கல்லை இந்திய சர்க்கார் கைத்தொழில் சப்ளை மந்திரி நேற்று மாலை நாட்டி இத் தொழிற்சாலைக்கு ஆசி கூறினார்.

இத்தொழிற்சாலை வருகிற ஜூன் மாதத்திற்குள் கட்டி முடிக்கப்படும் எனத் தெரிகிறது. காங்கிரீட்டினால் 'ஷெல்' அடைப்பதில் இத்தொழிற்சாலை கட்டப்பட்டு வருகிறது. இதேமாதிரி இதற்கு முன் கட்டப்பட்ட தொழிற்சாலை 'மெடல் பாக்ஸ்' கம்பெனியினுடையது.

வண்டலூரில் இத்தொழிற்சாலைக் கருகிலேயே இதன் ஆபீஸர்களுக்கும், சிப்பந்திகளுக்கும் விடுதிகள் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இந்த கம்பெனி தொழிற்சாலை இப்போது குரோம்பேட்டையில் இருக்கிறது. ஒரு தினத்திற்கு மூன்று கார்கள் உருவாக்கப்படுகின்றன.

ஒரு நாளைக்கு சராசரி 12 பெர்கூஸன் டிரேக்டர்கள் உருவாக்கப் படுகின்றனவாம். புது தொழிற்சாலையில் 300 முதல் 500 பெர்கூஸன் டிரேக்டர்கள் உருவாக்க வேண்டிய சாதனங்கள் இருக்கும் எனத் தெரிகிறது.

இக்கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் ஸர். ஜான்பிளேக். சென்னையிலுள்ள உப தலைவர் தோழர் கே. கோபாலகிருஷ்ணா.

## காஷ்மீர் பிரச்னை: எட்டு பிரதமர்கள் மட்டும் விவாதிப்பார்கள்

(:o:)

### தகராறு விஷயங்களில் கனடா பிரதமர் சமரசம்

லண்டன், ஜன. 9—

காஷ்மீர் பிரச்னையைக் குறித்து காமன்வெல்த் பிரதமர்கள் மட்டும் இன்று இரவோ அல்லது நாளை முற்பகலோ விவாதிக்கப் போகிறார்கள்.

வேறு யாரும் இந்த கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

கலந்துகொள்ளும் பிரதமர்கள் ஜவஹர்லால்நேரு (இந்தியா), லியாகத்அலி (பாகிஸ்தான்), ஆட்லி (பிரிட்டன்), லாரெண்ட் (கனடா), மென்ஸீஸ் (ஆஸ்திரேலியா), சேனநாயகர் (இலங்கை), ஹாலண்ட் (நியூஜிலாந்து), ஹிக்கின்ஸ் (தென்ரொடீஷியா).

தென்னாப்பிரிக்காவின் உள்நாட்டு மந்திரி டோஞ்ஜெஸ் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள மாட்டார்.

இப்பிரச்னை விஷயமாக ஏதாவது தகராறு விவாதத்தின்போது ஏற்பட்டால் கனடா பிரதம மந்திரி லாரெண்ட் மத்யஸ்தம் செய்து வைப்பார்.

இப் பிரச்னை விஷயமாக அதிக வாதப் பிரதிவாதம் ஏற்படாமல் சமரசத்திற்கான வழிகாண வேண்டும் என்ற நோக்கத்துடனேயே விவாதம் நடைபெறும்.

## இந்தோசீன எல்லையில் லட்சம் சீனத் துருப்புகள்

ஹாங்காங், ஜன. 9—

இந்தோசீனாவின் வடக்கு எல்லையில் மான்கே முதல் இந்தோசீன யுன்னான் ரயில்வேயிலுள்ள லோகே வரை செஞ்சீனர்கள் லட்சம் துருப்புகளைத் தயாராக வைத்திருப்பதாக இங்கு கிடைத்துள்ள செய்திகளிலிருந்து தெரிகிறது.

## ஐ. நா. பொது அசெம்பிளி பாரிசில் கூடலாம்

நியூயார்க், ஜன. 9—

இவ்வருஷம் ஐ. நா. பொது அசெம்பிளி அநேகமாக பாரிசில் கூடலாம் என்று தெரியவருகிறது.

எந்த நகரில் கூட்டலாம் என்பது குறித்து ஆலோசித்து முடிவு செய்ய ஐ. நா காரியதரிசி ஜெனரல் தோழர் டிரிக்விலை இம்மாதம் லண்டன் வருவார் என்று தெரிகிறது.

மாலைமணி

சென்னை 10—1—51 புதன்கிழமை

# பிணம் மணக்குமா?

## (2)

வடமொழி இலக்கியங்கள் அனைத்தும், மக்களை மூட நம்பிக்கையில் ஆழ்த்துபவைகளாகவும், உயர்வு தாழ்வு கற்பித்து மக்களை வேறு படுத்தி வைப்பவைகளாகவுமே இருக்கின்றன. வடமொழி நூல்கள்தாம் மக்களுக்குக் கோடிக் கணக்கான கடவுள்களைக் கற்பிப்பதும், மக்களின் தெய்வ பக்தியைக் கீழ்நிலைக்கு இழுத்துச் செல்வதும், வாழ்க்கையில் விபரீத நிலைகளைக் கற்பிப்பதுமாக இருக்கின்றன.

சான்றாக, வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்க்கப் பட்டிருக்கும் புராண நூல்களைப் படித்துப்பாருங்கள்! அவற்றில் கற்பிக்கப்பட்டிருக்கும் நீதிகள் எத்தகையவாக இருக்கின்றன வென்பது உங்களுக்கு நன்றாகப் புரிந்துவிடும்.

வடமொழியிலிருக்கும் புராணங்கள் மட்டுமன்று, மந்திர மார்க்க நூல்களையெல்லாம் படித்துப் பாருங்கள்! வடமொழியாளர்கள் பிரித்த சமயங்களையும், அச்சமயங்களின் கோட்பாடுகளையும், அச்சமயங்களை அனுசரித்த மதத்தலைவர்கள் போக்கையும் படித்துப் பாருங்கள்! நாம் சொல்லாமலே வடமொழி நூல்களின் ஒழுக்க உயர்வும், தமிழ் நூல்களின் பெருமையும் தெளிவாக விளங்கும்.

வடமொழியில் எழுதப்பட்ட வான்மீகி இராமாயணத்தில் இராவணன் சீதையின் கூந்தலைப் பிடித்து இழுத்துத் தூக்கி மடிமேல் வைத்துக் கொண்டு இலங்கை செல்வதாக எழுதியிருக்க, அதே சம்பவத்தைக் குறிக்க வந்த கம்பன் சீதையை இராவணன் தீண்டாமலே, நிலத்தைப் பெயர்த்துக் குடிலோடு தூக்கிச் சென்றான் என்று எழுதியிருப்பதொன்றே போதும் இவ்விருமொழிகளுக்குமிடையுள்ள வேறு பாட்டைக் காட்ட.

அதுமட்டுமன்று; சதிஅகல்யா என்று பத்தினி பட்டம் அளிக்கப்பட்டுள்ள அகல்யை, இந்திரனால் கள்ளத்தனமாகச் சேரப்பட்டபொழுது, அவள் இந்திரன் இன்பத்தில் திளைத்து மகிழ்ந்தாள் என்று வடமொழியாளர்கள் எழுதியிருக்க, அதே சம்பவத்தை எழுதிய கம்பன், அவள் அறியாமல் நிகழ்ந்த அந்நிகழ்ச்சியால் அவள் உள்ளங் குலைந்தாள் என்று தீட்டியிருப்பது போதுமே—இரு மொழி நாகரீகங்களையும் விளக்க.

இன்னும் புராணக் கடவுள்களைப் பற்றிய கதைகளையும் ஸ்மிருதிகள்போன்ற நூல்களில் கூறப்பட்டிருக்கும் சட்ட பாகுபாடுகளையும் விளக்கிக் கொண்டு போவதென்றால், தமிழர்கள் அவற்றைப் படிக்கவும் வெட்கப்படக்கூடிய வாறு நிறைந்திருக்கின்றன. இவ்வாறு வெட்கப்பட்டுத்தான் கம்பன் சீதை நிலையையும் அகலிகை நிலையையும் தமிழர் பண்பாட்டுக்கு ஏற்பத் திருத்தியமைத்துவிட்டான்.

ஒரு பெண் பலரை மணப்பதும், ஓர் ஆண் பல பெண்களை மணப்பதும், பெண்களைக் கடத்திச் சென்று விடுவதும், பெற்றோரை மிரட்டி, பெண்ணையே மிரட்டித் தூக்கிச் செல்வதும், அவள் மயங்கியுள்ள நிலையில் கடத்திச் செல்வதும், பொருள் கொடுத்துச் சாமான்களை வாங்குவது போல்பெறுவதும், வெறும் பொருள்களைபோன்று வைத்துச் சூதாடுவதுமாகிய நாகரீகங்களைச் சட்ட பூர்வமாக ஒப்புக்கொள்வதும, போதிப்பதும் அவ்வடமொழி நூல்களேயாகும்.

இவை விரிக்கின் பெருகும். இவைமட்டுமன்று, வடமொழி இலக்கணத்தை எடுத்துக் கொண்டு ஆராய்வதென்றாலும் நகைச்சுவைக்கு ஏற்றதாகவே அமைந்திருக்கிறது.

வட மொழியின் பால் இலக்கணம் படிக்கச் சிரிப்பை யூட்டும் தமிழனுக்கு. இதைப் பரிதிமாற் கலைஞர் என்று பெயரை மாற்றி வைததுக்கொண்ட சூரிய நாராயண சாஸ்திரியார் எழுதியுள்ள "தமிழ்மொழி வரலாறு" எனும் நூலில் பரக்கக் காணலாம்.

எனவே, தமிழர்கள் வடமொழியினின்று பிச்சை எடுத்தனர் என்று கூறுவது மன்னிக்க முடியாத பெருங் குற்றமாகும். "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பதுபோல, வடமொழி இலக்கணம் உயர்நதது என்று கூறிக்கொள்ள மட்டும் உரிமையுடைய ஆத்தான கவி தொல்காப்பியத்தைப் பழித்திருப்பது அவருடைய அறியாமையையும் அற்ப புத்தியையும் காட்டுகிறது.

வடமொழியின் குறைப்பாட்டை விளக்கிக் கூறச் சான்றுகள்

வேண்டுமெனில் நிறையக் கொடுக்க முடியும். ஆத்தான கவி இடம் அறியாமல் காலை விட்டுக்கொண்டார். தமிழ்நாட்டிலே, தமிழரின் உப்பைத தின்று உடம்பை வளர்த்த இந்தச் சர்மா உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்கிறார்; தாய்மொழியாம் தமிழைப் பழிக்கிறார்; தமிழரின் தலையாய நூல்களைப் பரிகசிக்கிறார். எந்த நிலையிலே? குப்பை மேட்டிலே நின்றுக்கொண்டு, மாடமாளிகைக் கட்டி வாழ்ந்தவனைப்பார்த்து உறுமுகிறார்? எங்கே! கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடக்கவேண்டிய கடமையை உணர்ந்திருக்கும் மாணவர்களிடையே. தமிழகம் இதுபோன்ற பிதற்றல்களுக்கு இடந்தராதென்பதை ஆத்தான கவி உணரவேண்டும்.

அரசாங்கத்தார் இத்தகைய பேர்வழிகளை அடக்க முன்வர வேண்டும். இத்தகைய வரலாற்று அறிவோ, தாய்மொழி பற்றோ அற்ற பேர்வழிகளை, ஆத்தான கவிகளாக்கினால், இவ்வாறு இக்கவிகள் உளறிக்கொட்டுவதும் இதனால் ஆத்திரமடையும் தமிழர்கள் குதித்தெழுவதும் நாட்டிலே குழப்பம் உண்டாகக் காரணமாகிவிடுகிறது.

எனவே, இக்கவி அரசர் கல்லூரியில், தட்டிக் கேட்க ஆளில்லாவிடத்தில் சண்டப்பிரசண்டம் செய்திருக்கிறது. அக்கவி, தமிழர்களிடம் மன்னிப்புப் பெறுமாறு செய்யவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

### பஞ்சக் கொடுமை

—

### இரு குழந்தைகளைக் கிணற்றில் தள்ளிய தாய்

மதுரை, ஜன. 7—

தான் பெற்ற பிள்ளைக்கு உணவு அளிக்கமுடியாத தாய் தனது இரு குழந்தைகளை கிணற்றில் போட்டு விட்டு, தானும் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்ததாக ஓர் வழக்கு இன்று இங்கு அடிஷனல் சப் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கு வந்தது.

இந்தப் பரிதாபத்திற்குரிய வழக்கில் "சடாஸ்டின்" என்ற அவளுடைய மகன் சாட்சியளித்தான். அவன் தனது வாக்குமூலத்தில் தனது தம்பிக்கு சோறு போட முடியாமல், தனது தாய் இருசகோதரர்களை கிணற்றில் தூக்கி எறிந்ததாகவும், தன்னையும் தூக்கிப்போட முயன்றதாகவும், ஆனால் தான் தப்பித்து ஓடிவிட்டதாகவும் கூறினான்.

இந்தப் பேதைப் பெண்ணின் பெயர் தரிசா என்பதுதான். அந்தோணி என்றமகனையும், பில்மானு என்ற மகளையும் தான் இவள் கிணற்றில் எறிந்துவிட்டாள்.

மேலும் விசாரணை 10-ந் தேதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ந-நி)

---

### கோரியா, பாலஸ்தீன புனருத்தாரண வேலை

லேக்ஸக்ஸஸ், ஜன. 9—

கொரியா, பாலஸ்தீன நிவாரண விஷயமாக ஒவ்வொருநாடு குழுவுடனும் தனித் தனியாக சந்தித்துப் பேச ஐ. நா.-வின் குழு முடிவு செய்திருக்கிறது. இக்கமிட்டிக்கு நவநகர்ஜாம் சாகேப் தலைவர்.

நிவாரண வேலைக்கு ஒவ்வொரு தேசமும் தன்னாலானது எவ்வளவு உதவ முடியும் என்பதை அறிய தூதக்குழுக்களுடன் பேச முடிவு செய்திருக்கிறது.

பாலஸ்தீன் நிர்மாணத்திற்கு 550,00,000 டாலர் வேண்டும் என்று எஸ்டிமேட் போடப்பட்டதாம் இதில் முக்கால் பங்கு கிடைத்துவிடும் என்று தெரிகிறது. இதற்கான வாக்குறுதிகள் கிடைத்திருக்கிறதாம்.

### ஐநாவில் செஞ்சீனா இடம் பெறும் பிரச்னை

லண்டன், ஜன. 9—

சீனா விஷயமாக ஐ. நா. மிகவும் ஜாக்கிரதையுடனேயே நடந்து கொள்ளவேண்டும் என்று "மாஞ்செஸ்டர் கார்டியன்" பத்திரிகை கூறுகிறது.

அப்பத்திரிகை எழுதுவதாவது: சீனர்கள் ஐ நா.வில் இடம் பெற வேண்டுமென்றால் இருதரப்பிலும் முதலில் சமரஸம் ஏற்படவேண்டும். சீனர்களுக்கும் இது தெரியும். ஆனால் சீனாவில் ஒருபெரும் புரட்சி ஏற்படவிருக்கிறது.

பிரெஞ்சுப் புரட்சியினால் ஐரோப்பாவில் இருபது ஆண்டு தம் ஏற்பட்டது. சீனப்புரட்சி ஆசியாவை யுத்தத்தில் ஈடுபடுத்துவதை நாம் தடுக்க முடியுமா?

---

### மால்டா மாநாடு

லண்டன், ஜன 8—

மால்டாவில் இம்மாத முடிவில் ஒரு முக்ய மகாநாடு நடைபெற விருப்பதாக யுனைடெட் ஸ்டேட்ஸ் கடற்படை அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர்.

மத்ய கிழக்குப் பிரதேசத்தில் தரைப்படை, விமானப்படை, கடற்படை இவை முன்புள்ள பிரச்னைகள், பாதுகாப்புக்கு மேற்கொண்டு எடுக்கவேண்டிய நடவடிக்கை முதலியவை பற்றி அமெரிக்க பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகள் ஆலோசிக்க விருக்கின்றனர்.

---

### ஐஸன்ஹோவர், மாண்ட்கோமரி இதாலி செல்வர்

ரோம், ஜன. 9—

ரோமில் இம்மாத மத்தியில் ஜெனரம் ஐஸன்ஹோவர் இதாலிய பாதுகாப்புக் கௌன்சில் மெம்பர்களைச் சந்திப்பார் எனத்தெரிகிறது.

பிரபல ராணுவ தலைவர் பீல்ட் மார்ஷல் மாண்ட்கோமரியும் இம்மாதம் ரோமுக்குச செல்லலாம் எனத் தெரிகிறது.

## தி. மு. கழக கொள்கைகளைப் புத்தகமாக்கவும்

—

### வ. ஆர்க்காடு. மாவட்ட தி. மு. க. செயற்குழு தீர்மானம்

போளூர், ஜன. 9—

வட ஆர்க்காடு மாவட்ட தி. மு. க. செயற்குழு திருவண்ணுமலையில் செயலாளர் சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் 7-1-51ல் கூடியது. பல கிளைக்கழக பிரதிநிதிகள் வந்திருந்தனர். அதுபோது நிறைவேற்றிய தீர்மானங்களாவன:

(1) வட ஆர்க்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகராண்மைக் கழகத் தலைவர் தோழர் சி. எம். சுப்பிரமணியம் அவர்கள் இயற்கை எய்தியதற்கு இக்கூட்டம் வருந்தி அன்னுரின் குடுபத்தாருக்கு வருத்தம்தெரிவிக்கிறது.

(2) குடியேற்றம் தோழர் சங்கரன் அவர்களும், தோழர் சுப்பிரமணியம் அவர்களும் பொதுச் செயலாளர் அவர்களுக்கு எழுதியிருக்கும் 1-1-51 ,தேதிய கடிதத்தின்மீது, 5-2-51 தேதியில் செயலாளரும், துணைச் செயலாளரும், தோழர் கன்னையன் (ஆரணி) அவர்களும் சென்று முடிவுகாண தீர்மானிக்கப்பட்டது.

(3) பொதுச் செயலாளர் அவர்களின் 27-12-50 தேதிய அறிக்கை படிக்கப்பட்டது. கூடிய சீக்கிரம் பதில் அனுப்பத் தீர்மானிக்கப்பட்டது.

(4-ஏ) திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளையும், திட்டங்களையும் கூடிய சீக்கிரத்தில் புத்தக வடிவாக்கி, அதில் நாட்டுப்பிரிவினையின் காரணங்களையும், அதனுல் விளையும் பயனையும், நாடு பிரிந்தால் அதை நிர்வாகிக்க முடியும் என்பதற்கு ஆதாரமான புள்ளி விவரங்களையும் ஒன்று சேர்த்து வெளியிடும்படி பொதுச் செயலாளர் அவர்களை இம்மாவட்ட செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

(4-பி) மேற்கண்ட புத்தகத்தை முதன் முதலாக கூட்டப்படவிருக்கும் சென்னை மாநில மாநாட்டில் நிறைவேற்றிவைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய மத்திய செயற்குழுவைக் கேட்டுக்கொள்கிறது.

(5) வட ஆர்க்காடு மாவட்டத்தில், மழையின்மையால் பயிரிடாது போயிருந்தும்—பயிர் செய்தும் சாவியாகிவிட்டதால் சென்னை சர்க்கார் எது காரணம் பற்றியோ வரி வஜா செய்யும்படி பிற ஆறு மாவட்ட கலெக்டர்களுக்குமட்டும் உத்திரவு கொடுத்துவிட்டு இம்மாவட்டத்தை விட்டுவிட்டார்கள். இம்மாவட்டத்தில் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது என்பதைச் சென்னை சர்க்காருக்கு தெரிவிப்பதோடு இம்மாவட்டத்திற்கு வரி வஜா செய்யும்படி கேட்டுக்கொள்கிறது.

(6) விளைவு இருந்த காலத்தில் சர்க்கார் தனது சட்டத்தையும் அதிகாரத்தையும் செலுத்தி கிராமங்களில் தானியங்களைக் கொள்முதல் பூராவையும் செய்துவிட்டு; விளைவில்லாத இந்தக் காலத்தில் கிராம உணவு தானியப் பங்கிட்டுக் கடைகளை மூடிவிட்டதை இச்செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. கிராமங்களில் இம்மாவட்டத்தின் எல்லா ஊர்களிலும் பிரிவினையில்லாமல் எல்லா கார்டுதார்களுக்கும் நிவாரண கடைமூலம் உணவு தானியங்களை விநியோகிக்கக் கேட்டுக்கொள்கிறது.

(7) இம்மாவட்டத்து கைத்தறி நெசவாளர்களுக்குப் போதிய நூல் இன்மையாலும், கைத்தறி நெசவாளர்களுக்கும், சில்லரை நூல் வியாபாரிகளுக்கும் இடையில் "மாஸ்டர் வீவர்ஸ்" இருப்பதனுலும்தான் கைத்தறி நெசவாளர்கள் கஷ்டப்படுகிறுர்கள். எனவே இம்மாவட்டத்தார் பெரும்பகுதி கைத்தறி நெசவாளர்கள் பட்டினியைப் போக்குவதற்கு வேண்டிய நூல் வசதி செய்து கொடுக்கவும் "மாஸ்டர் வீவர் "களுக்குக் கொடுக்கும் தனி நூல் கோட்டாவை எடுத்துவிடவும், இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

———

### எனது நன்றி

———

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக முதல் மாநாடு சிறப்பாக நடந்தேறிவிட்டது. எதிர்ப்பு ஏராளம், பண உதவி குறைவு! எனினும் மாநாடு வெற்றிகரமாக நடந்தேறிவிட்டது. அதற்குக் காரணமாக அமைந்த கழகத் தோழர்களுக்கென் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தலைமைதாங்கி, மாநாட்டை வெற்றிகரமாக நடத்திவைத்த தோழர் இரா. இளம்வழுதி அவர்களுக்கு நாஞ்சில் மாவட்ட தி. மு. க. மாநாட்டுக் குழுவினரின் சார்பில் எனது நன்றி. துவக்கிவைத்த தோழர் என். எஸ். இளங்கோ அவர்களுக்கும், கலந்துகொண்டு அறிவுரை வழங்கி தோழர்களை ஊக்கிவித்து மாநாட்டைச் சிறப்புறச் செய்த பொதுச் செயலாளர் அண்ணு, முன்னணி வீரர்களான கழகப் பேச்சாளர்கள் அத்தனைபேருக்கும் குழுவின் சார்பாக நான் நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாநாட்டிலே கலந்து, அண்ணுவிற்குப் பேட்டியளித்த, தமிழ்-மலையாள நிருபர்களுக்கும் நன்றி உரியவாகிறது!

குழுமிய தோழியர்கள், தாய்மார்மார்கள் மாநாட்டைச் சிறப்புறச் செய்தமைக்குப் பெருமை-நன்றியறிதல்.

முன்னின்றுழைத்தத்தொண்டர்கள், தோழர்கள் அனைவருக்கும் மீண்டும் நன்றி. நன்கொடை தந்து உதவியவர்கள், டிக்கட் வசூல் செய்து ஒத்துழைத்தவர்கள் அத்தனைபேரும் எமது நன்றிக்குரியவர்களாகிறுர்கள்.

வாழ்க கழகத் தோழர்கள்! வளர்க அவர்தம் தொண்டு.

ஏ. இராமசாமி
பொதுச் செயலாளர்

## தி. மு. கழக பொதுக் கூட்டங்கள்

**19—1—51**

**குன்றத்தூர்**
தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் எம், ஏ., என். வி. நடராசன்.

**கீழ்புவனகிரி**
தோழர் என். வி. நடராசன்.

**20—1—51**

**வேலூர்**
தோழியர் சத்தியவாணிமுத்து.

**சென்னை (இராயபுரம்)**
தோழர்கள் புதுவை தில்லை அ. பாரி, மா.இளஞ்செழியன்.

**அம்மாபேட்டை (தஞ்சை)**
தோழர்கள் மு. கருணுநிதி, என். எஸ். இளங்கோ.

**21—1—51**

**திருவள்ளுர்**
தோழர் மா. இளஞ்செழியன்.

**4—2—51**

**திருச்சி-ஜெயகோண்டான்**
தோழியர் சத்தியவாணிமுத்து.

## ஐ. நா.வில் செஞ்சீனுவைச் சேர்ப்பதற்கு காமன்வெல்த் நிபந்தனை

—

### கனடா அரசியல் வட்டாரங்களில் தகவல்

ஆட்டவா, ஜன. 17—

கீழ்க்கோடி நாடுகளின் பிரச்னைகளை மேற்கு நாடுகள் மிக நன்ருக அறிய காமன்வெல்த் மகாநாடு உதவி புரிந்ததென்றும், இதுவே மகாநாட்டின் மாபெரும் வெற்றி என்று கனடா பிரதம மந்திரி தோழர் லாரெண்ட் இங்குவந்து சேர்ந்ததும் கூறினர்.

செஞ்சீனு ஐ. நா. வில் மெம்பராக அனுமதிக்கப்பட காமன்வெல்த்நாடுகள் பின்கண்ட நிபந்தனையை ஏற்படுத்தியிருப்பதாக இங்குள்ள அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

செஞ்சீனு உடனடியாககொரியா போரை நிறுத்தவேண்டும், ஐ. நா. வின் யோசனைப்படி நான்கு வல்லரசு மகாநாட்டிற்கு இசையவேண்டும்,

இந்த நிபந்தனைப்படி செஞ்சீனு நடைபெற்ருல் எல்லா காமன்வெல்த் நாடுகளும் ஐ. நா. வில் செஞ்சீனு சேர்க்கப்படுவதை ஆதரிக்கும் என்று கூறப்படுகிறது.

———

### ஏழையின் கண்ணீர்

குருகாட்டூர் தி. மு. க. சார்பில், மாவடிபண்ணை தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் தயாரித்த 'ஏழையின் கண்ணீர்' என்னும் சீர்திருத்த நாடகம் 20-1-51 சனி இரவு 8-30 மணிக்கு நடத்தப்படும்.

## கடலை, கடலெண்ணெய், ஏற்றுமதிக்குத் தடை

———

### இந்திய அரசாங்கத்தின் அறிக்கை

சென்னை, ஜன. 16—

சென்னை, பம்பாய், கல்கத்தா துறைமுகங்களிலிருந்துஇனிகடலையும், கடலெண்ணெயும் ஏற்றுமதி செய்ய இந்திய சர்க்கார் தடை உத்திரவு பிறப்பத்திருக்கின்றனர்.

இந்திய சர்க்காரின் வர்த்தக மந்திரி இலாகாஇதுவரையிலும்.கடலையும், கடலெண்ணெயும், ஏற்றுமதி செய்யப்பட்ட தொகையைக் கணக்கிட்டு இந்த முடிவிற்கு வந்திருக்கிறது என்று கூறப்படுகிறது.

இந்திய அரசாங்கத்தின் வர்த்தக மந்திரி இலாகா கூறியிருப்பதாவது:—

இதுவரையிலும் இவைகளை ஏற்றுமதி செய்ய அதிகப்படி மனுக்கள் பதிவு செய்யப்பட்டிருக்கிறபடியால், ஜனவரி மாதத்தில் பதிவு செய்து கொண்டவர்களுக்கு ஏற்றுமதி செய்ய இன்னும் ஒரு மாதம் அவகாசம் அளிசகப்பட்டிருக்கிறது. ஆனுல் அவர்கள் ஏற்றுமதி செய்யும் அதிகாரிகளிடம் தாங்கள் பதிவு செய்துகொண்ட தஸ்தாவேஜுக்களை காண்பிக்க வேண்டும். புதிதாக இனி ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

———

## கன்னட மாவட்ட மத்திய திராவிட முன்னேற்றக் கழகம்

———

அன்புடையீர் மேற்படி மாவட்டக் கமிட்டிக் கூட்டம் வருகிற ஞாயிறு 28—1—51 மாலை 5 மணிக்கு 167 ஏ பெங்களூர் அக்கிப்பேட்டை திராவிட முன்னேற்றக் கழக மனையில் நடைபெறும் அதுசமயம் மாவட்டக் கமிட்டி திறமையாக பணியாற்ற வழி வகுக்கவும், மார்ச் இறுதிக்குள் மாநாடு நடத்தவும் முடிவாக்கப் போவதால் எல்லாக் கிளைக் கழக பிரதிநிதிகளும் இதையே அழைப்பாக ஏற்றுக்கொண்டு தவருமல் வரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

டி. கே. சின்னதுரை
விளம்பர செயலாளர்

## ஆணை மீறி நடக்கும்

1-ம் பக்கத் தொடர்ச்சி

படியால், 144-வது செக்ஷன் வாபஸோ, ஜெயிலில் கிடப்பவர்கள் விடுதலையோ நடைபெருதபடியால், செவ்வாய்ப்பேட்டை, அரிசிபாளையம், அம்மாபேட்டை, பொன்னம்மாபேட்டை, குகை முதலியவிடங்களிலிருந்து தொண்டர்கள் கூட்டம் கூட்டமாகவந்து மாலை 3-30 மணி முதல் கலெக்டர் அலுவலகத்தின்முன் மறியல் செய்யத் துவங்கினர், போலீசார் மறியல் செய்தவர்களைக் கைது செய்தனர். அதாவது 64 ஆண்களும் 27 பெண்களும், 33 குழந்தைகளும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

## ஏ. கே. வேலன்

### சுற்றுப்பிரயாணம்

| | |
|---|---|
| 21—1—51 | குளித்தலை |
| 22—1—51 | வேலூர் |
| 23—1—51 | பறங்கிபேட்டை |
| 28—1—51 | குடியாத்தம் |
| 29—1—51 | திருவத்திபுரம் |
| 11—1—51 | கம்பம் |

## நெடும்பாவு கைத்தறி நெசவாளர் சங்கம்

### 50 ரு. பஞ்சப்படி கொடுக்கவும்

அருப்புக்கோட்டை, ஜன. 14—

14—1—51 ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்குப் புளியம்பட்டி சாலியர் மகாஜன ஐக்கிய சங்கக் கட்டிடத்தில் அறப்போர் குழுவின் முதல் சர்வாதிகாரி தோழர் ச. அ. முத்துச்சாமி அவர்களின் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சு. காளிமுத்து, இ. முத்துக்காளை, ச. மாணிக்கவாசகர், எம். எஸ். இராமசாமி ஆகியவர்கள் சேலம் நெசவாளர்களுக்கு விதிக்கப்பட்ட 144 தடை யுத்தரவையும், போலீஸாரின் தடியடி தர்பாரையும் கண்டித்துப் பேசினார்கள். பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

தீர்மானங்கள்

1. 'வேலைக்கு நூல் கொடு, வாழ்வுக்கு வழி செய்' என்று கிளர்ச்சி செய்த சேலம் நெசவாள மக்கள் 100 கணக்கானவரை சிறை செய்தும், ஊர்வலங்களுக்கும், பொதுக் கூட்டங்களுக்கும் தடை விதித்தும் ஜனநாயக உரிமையைப் பறிக்கும் சென்னை சர்க்காரின் போக்கை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

2. நூல் போதுமானபடி கைத்தறிகளுக்குக் கிடைக்க மிகவும் காலதாமதம் ஆகுமென்று தெரிவதால், அவ்வாறு கிடைக்கும்வரை பட்டினியால் பரிதவிக்கும் ஏழை நெசவாள மக்களுக்கு மாதம் ஒன்றுக்கு குடும்பம் ஒன்றுக்கு குறைந்த பட்சம் ரூ 50 பஞ்சப்படி கொடுத்துதவ வேண்டுமென்று சென்னை சர்க்காரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

3. கைத்தறித் துணிகளுக்குரிய விற்பனை வரியை ரத்து செய்ய வேண்டுமாய் சென்னை சர்க்காரை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

மேற்கண்ட கோரிக்கைகளை 1951-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ந் தேதிக்குள் சென்னை சர்க்கார் நிறைவேற்றவில்லையானால் 1-2-51 முதல் நமது தொண்டர்கள் நீல நிறப் பாட்ஜ் அணிந்து அருப்புக்கோட்டை தாசில்தார் அலுவலகத்தின் முன்பாக அமைதியானமுறையில் சட்டத்திற்குட்பட்டு மறியல் செய்வார்கள். ஒவ்வொரு நாளும் (விடுமுறை நாட்கள், முகாம் நாட்கள் நீங்கலாக) மாலை 3 மணியிலிருந்து 5 மணி வரை தொடர்ந்து மறியல் நடைபெறும்.

## இனி நடப்பவை

சென்னை, சாம்பையர் வீதி:— 21-1-51 ஞாயிறு காலை 9 மணிக்குப் பகுத்தறிவுப் பாசறையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். அப்போது அ. பாண்டியன் தலைமையில் இரா. மணாளன் அ. மு. மணி, சம்பத், இராதாமணாளன், துரைராஜ், முத்து, பச்சை, "மக்களும் ஆட்சியும்" என்னும் பொருள் பற்றிப் பேசுவார்கள்.

* * *

21-1-51 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு, சேலம் அம்மாபேட்டை மெயின்ரோடு திராவிட முன்னேற்றக்கழக (நகரகிளை) சொற்பயிற்சிக் கூட்டம் தோழர் எம். பி. வள்ளியப்பன் அவர்கள் தலைமையில் கழக கட்டிடத்தில் நடைபெறும். அதுபோது தற்கால அரசியல், நெசவுத் தொழிலாளர்களின் நிலை, வடநாடு, தென்னாடு என்னும் பொருள் பற்றி, தோழர்கள் எஸ். ஏ. ரகீம், டி. என். இராபலிங்கம், எஸ். சி. ஆறுமுகம் மற்றும் பல தோழர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

* * *

அம்மாபேட்டை (தஞ்சை) புகைவண்டிநிலையத்திற்கு வடபுறம் 20-1-51 சனி மாலை 4 மணிக்கு தி. மு. க. துவக்கவிழா நடைபெறும். நாராயணசாமி தலைமையில், மு. கருணாநிதி, என். எஸ். இளங்கோ, மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

கீழ்புவனகிரி:—19-1-51 வெள்ளிக்கிழமை மாலை 4-மணிக்கு பெரியதேவாங்கர் வீதியில் கொடியேற்றுவிழாவும் மாலை 5 மணிக்கு வெள்ளாற்று பாலத்துக்கருகில் தி. மு. க. சார்பில் பொதுக்கூட்டமும் நடைபெறும். அவ்வமயம் திராவிடன் ஆசிரியர் தோழர் என். வி. நடராசன் அவர்களும் மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

## புத்தாண்டு விழாவில் அறிஞர் பட ஊர்வலம்

கடம்பூர் கிளை:—14-1-51 இவ்வூர் தி. மு. கழகத்தின் சார்பாக புத்தாண்டு பொங்கல் விழா கழக கட்டிடத்திலிருந்து மாலை 4-30 மணிக்குத் தோழர் ஆர். முத்துமாலை அவர்கள் தலைமையில் தொண்டர்கள் அணிவகுத்து அறிஞர் அண்ணாவின் அழகிய உருவப்படம் கரத்திலேந்தி டி. பி. ராமசாமி (கம்பர்) பார்ட்டியார் மேளவாத்திய இசையரங்குடன் 'அண்ணா வாழ்க! புத்தாண்டு பொங்குக!' என்ற வாழ்த்தொலி வானதிர ஊர்வலம் புறப்பட்டு முக்கிய தெருக்களின் வழியாக வந்து ஊர்வலம் 5-30 மணிக்குக் கழகக் கட்டிடம் வந்து சேர்ந்தது. அவ்வமயம் தோழர் வே. மு மாரியப்பா அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ப. சிவமுருகன், பொ. தங்கச்சாமி நாட்டுப்பண் பாடிய பின் ஆர். ஏ ரத்தினசாமி, சு. தர்மராஜ், மு. பேச்சியப்பன், எம். எஸ். பி. சாமி ஆகியோர்கள் புத்தாண்டு பொங்கல் விழா வென்னும் பொருள் பற்றிப் பேசிய பின் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேறியது.

தீர்மானம்

சுமார் 8000 ஜனத்தொகை கொண்ட எங்கள் பஞ்சாயத்து ஏறியாவுக்கு ஹைஸ்கூல் இல்லாததினால் மாணவர்கள் படிக்க வசதியில்லாமல் அல்லல்படுகிறார்கள். இதற்கு முன்னால் இவ்வூர் முக்கியஸ்தர்கள் வேண்டிய முயற்சி செய்தும் அரசியலார் இதுவரையும் எவ்வித முயற்சியும் எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால் உடனடியாக எங்கள் ஊரில் ஹைஸ்கூல் நிறுவிக் கொடுக்குமாறு கல்வி அமைச்சர் அவர்களையும், நெல்லை மாவட்ட நகராண்மைக் கழகத் தலைவர் அவர்களையும் இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

## திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகம்

# துவக்க விழா

**21—1—51 ஞாயிறு மாலை 4-மணிக்கு**

**கோகலே மண்டபத்தில்**

**நடைபெறும்**

தலைவர்: வி. டி. ஆதிலட்சுமி அம்மையார்

கொடியேற்றுபவர்: டாக்டர் தருமாம்பாள் அம்மையார்

படத்திறப்பு: சேர்தீஸ்வரி அம்மையார்

சொற்பொழிவாளர்கள்: மூவலூர் இராமாமிர்தத்தம்மையார், சத்தியவாணிமுத்து, அருண்மொழி பி. ஓ. எல்., வி. பூங்கோதை, புலவர் எயினி லாரன்ஸ், உருக்குமணி, இராமதிலகம், மற்றும் பல தோழியர்கள் பேசுவார்கள்.

திருமதி: டாக்டர் தருமாம்பாள் அம்மையார் அவர்களுக்கு விழாவில் பண முடிப்பு அளிக்கப்பெறும்.

## சிறைசென்ற...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டி. வி. தங்கராஜ், ல. வ. கிருட்டிணன், எம். குருதாஸ், சி. பாக்கியம், கே. எஸ். இராசமான், எம். எஸ். இராமையா, எம். பிச்சை, செல்லம் ஆகியோர் சந்தப்பேட்டை. கலைத்தூதன் கீழமாசி வீதி, எம். ரத்தினசாமி கோரிப்பாளையம், அ. ராமசாமி நரிமேடு, எம். எஸ். நடைஅரசு, எஸ். கே. சண்முகம் எம். கதிர்வேலு செல்லூர், எம். வி. மணி, பி. ராமசாமி, ஏ. எம். பால், கு. ரத்தினம் தெற்கு வாசல், பெரியநாயகம், நாகசுந்திரம், சுப்பிரமணியம் ஆகியோர் சுப்பிரமணியபுரம், அரிகிருஷ்ணன், எஸ். தேவஇரக்கம், யாக்கோப், சி வேலாயுதம், ச. சுப்பிரமணி, மு. ஆதிநாராயணன், ஆ. பொன்னையா, சி. அய்யம்பெருமாள், மீனாட்சித்தோப்பு, எஸ். முத்து, ப. சீனி, ஆ. ரெத்தினம், கு நாகு. கு. மீனாட்சிநாதன், சு. பெருமாள், கு. ப. கணிபதி, தே. முத்துசாமி, கு. வேலு, பாப்பையா, கி. இசக்கிநாதன், அய்யனார், ஏ. ரஞ்சிதம், இப்ராகிம், உ. அருணாசலம், அழகரடி, து. பெருமாள், கருப்பையா டவுன்ஹால் ரோடு. (ந. நி.)

# "போர்வாள்"

### முக்கிய அறிவிப்பு

பொங்கல் விழா விடுமுறையை முன்னிட்டு இந்த வாரம் 20-1-51 சனியன்று வெளிவரவேண்டிய இதழ் நிறுத்தப்பட்டுள்ளது. அடுத்த வாரம் 27-1-51 சனிமுதல் "போர்வாள்" வழக்கம்போல் வெளிவரும்.

## திராவிடத்தில் தமிழர் திருநாள்

திண்டிவனம்: 14-1-51ல் பொங்கல் விழா தி. மு. க. சார்பில் சிங்கனூர் மிராசுதாரும், ஜில்லாபோர்டு மெம்பருமாகிய எம். வேணு கோபால் தலைமையில் கூடியபோது தஞ்சை ஏ. கே. வேலன் சொற்பொழிவாற்றினார்.

* * *

காட்டூர்: 14-1-51ல் தி. மு. க. சார்பில், எஸ். வெங்கடாசலம் தலைமையில் கூடியபோது ஏ. சாமியப்பன், கே. ராமலிங்கம், ஆர். மாணிக்கம், கே. ஆர். சீரங்கன் இவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.


### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| 1 | ஆண்டு | ரூ. 18—0—0 |
| 6 | திங்கள் | ரூ. 9—0—0 |
| 3 | திங்கள் | ரூ. 4—8—0 |

தனிப்பிரதி முக்காலணா. மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

### விளம்பர விகிதம்

அங்குலம் ஒன்றுக்கு ரூ. 5—0—0

நீடித்த விளம்பரங்களுக்கு சலுகையுண்டு விவரங்களுக்கு எழுதவும்.

**"மாலைமணி" பதிப்பகம்.**

மண்ணடி-சென்னை-1

Edited, Printed & Publishet by T. M. Parthasarathy at the Mercantile Press 2/45, Muthumari Chetty Street, Madras-1.